STC.No. 886/2024
நாள் 17.09.2025.
P.W.1 – (பாண்டியராஜன் )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

**1.** நான் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெருமாள்பட்டி பிள்ளையார் தெருவில் குடியிருக்கிறேன். நான் புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரியின் கணவர் பெயர் அருள்தாஸ் எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அருண்ராஜ். சாட்சி அவரது நிரூபண வாக்குமூலம் மற்றும் புகார் மற்றும் சட்ட அறிவிப்பு ஆகியவற்றை பார்த்துவிட்டு அருள்தாஸ் என உள்ளதாகவும் தட்டச்சு செய்யும்போது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டதாக தெரிவித்தார். என் நிரூபண வாக்குமூலத்தை நான் தான் படித்துபார்த்து கையெழுத்து செய்தேன் என்றால் சரி. எனக்கு எதிரியை குறித்து முழு விபரங்கள் சரியாக தெரியாததால் நான் அவ்வாறு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் தட்டச்சு பிழை எனச் சொல்வது தவறு என்றாலும் சரியல்ல. எதிரி மங்காகுளம் இந்து தொடக்க பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிகிறாரா என்றால் அவர் ஆசிரியை எனத் தெரியும் தலைமை ஆசிரியையா எனத் தெரியாது. என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரி தலைமை ஆசிரியராக பணிபுரிகிறார் எனச் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. நான் எதிரியை சந்தித்ததே இல்லை என்பதால் நான் எதிரியை தலைமை ஆசிரியர் எனத் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவரை சந்தித்துள்ளேன்.

2. என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலம் ஆகியவற்றில் எதிரி தலைமை ஆசிரியை என யார் தெரிவித்த விபரத்தின் படி அவ்வாறு கூறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அவர் ஆசிரியை என்று தான் எனக்கு தெரியும். எனக்கும் எதிரிக்கும் கடன் கொடுக்கல் வாங்கல் பழக்கம் இல்லாததால் எதிரி தலைமை ஆசிரியை என நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் எனக்கு நல்ல பழக்கம். எதிரியின் கணவர் எனக்கு இன்றிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக பழக்கம். எதிரியின் கணவர் எந்த வேலைக்கும் செல்வது கிடையாது என்றால் அவர் பேருந்து நிலையத்திற்கு அருகே எஸ்என்ஸ் கடை வைத்திருந்தார். அதன் மூலமாக எனக்கு பழக்கம் அவர் வேலைக்கு சென்றாரா என்று எனக்கு தெரியாது. எதிரியின் கணவர் 2017ம் ஆண்டு முதல் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றாலும் அவர் நடத்தி வந்த கடையையும் விட்டுவிட்டு ஊரெல்லாம் கடன் வாங்கினார் என்றாலும் எனக்கு தெரியாது. எதிரியும் அவர் கணவரும் 2018ம் ஆண்டு முதல் பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. இருவரும் சேர்ந்துதான் கடன் கேட்டார்கள், கடன் வாங்கினார்கள்.

3. என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரி மற்றும் அவர் கணவர் என இருவரும் சேர்ந்துதான் கடன் கேட்டதாகவும், கடன் வாங்கியதாகவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் அந்த காலகட்டத்தில் எதிரியும் அவர் கணவரும் சேர்ந்து வாழவில்லை என்றாலும் சேர்ந்து கடன் கேட்கவில்லை என்றாலும் சேர்ந்து கடன் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. பு.சா.ஆ.4 அஞ்சல் உறையில் எதிரியின் தகப்பனார் பெயர் அருள்தாஸ் என்றும், எதிரி தலைமை ஆசிரியை என்றும்

குறிப்பிடப்பட்டுள்ளதால் சட்ட அறிவிப்பு எதிரிக்கு சார்பாகவில்லை என்றால் எதிரியின் கணவர் பெயர் அருள்ராஜ், அருள்தாஸ் எனத் தவறாக எழுதப்பட்டுள்ளது எதிரியின் தந்தையார் பெயர் எனக்கு தெரியாது. எதிரி அறிவிப்பை முதல் முறை வாங்கவில்லை. இரண்டாம் முறை அனுப்பியபோது தான் வாங்கினார். நான் எதிரி முதல் முறை அறிவிப்பை வாங்கவில்லை என்றும், இரண்டாம் முறை அனுப்பியபோது தான் வாங்கினார் என்றும் நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு 2ம் முறை அனுப்பியதாக எந்த அறிவிப்பும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் 2ம் முறை எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும் அவ்வாறு எந்த அறிவிப்பும் எதிரிக்கு சார்பு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

4. நான் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடை வைத்துள்ளேன். நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். எதிரி கிறிஸ்தவர் என்றாலும் நான் இந்து என்றாலும் சரி. எதிரி 12.11.2022 அன்று கடன் கேட்டதாக சொல்வது, 24.11.2022 அன்று நான் கடன் கொடுத்ததாக சொல்வது எங்கு வைத்து கடன் கேட்டார் என்றோ எங்கு வைத்து நான் கடன் கொடுத்தேன் என்றோ என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் ரூ.1,50,000/– கடன் கொடுத்ததாக சொல்வதற்கு எந்த ஆவணமும் அன்றைய தேதியில் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அன்றை தினம் வட்டித் தொகை எதுவும் பேசிக் கொள்ளவில்லை என்றால் சரி. நான் ரூ.1,50,000/– கொடுத்ததாக சொல்வதற்கு வீட்டு பத்திரம் அல்லது வேறு எதாவது செக்யூரிட்டி ஆவணம் எழுதி வாங்கினேன் என்றால் இல்லை நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். எதிரியின் வீட்டு விலாசம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். நான் எதிரியின் வீட்டு விலாசத்திற்கு அறிவிப்பு அனுப்ப நான் முயற்சி செய்தேனா என்றால் இல்லை. பள்ளிக்கூடத்திற்கு தான் அனுப்பினேன். எதிரியின் வீட்டு விலாசம் எனக்கு தெரியாது என்பதால்தான் எதிரியின் வீட்டு விலாசத்திற்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எனக்கு ரூ.1,50,000/– பெரிய தொகை என்றால் சரி. நான் அந்த தொகையை கொடுத்ததாக சொல்லும் போது சாட்சிகள் வைத்து கொடுத்தேனா என்றால் இல்லை.

5. எதிரி அரசு ஊழியர் என்றால் சரி. எதிரி நான் ஆசிரியை என்பதால் எவ்வித செக்யூரிட்டி ஆவணங்கள் வழங்காமல் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் கடன் பெற தகுதியுடையவர் என்றாலும் ஆசிரியர் சிக்கன நாணய சங்கத்தில் எவ்வித செக்யூரிட்டி ஆவணமும் இல்லாமல் எதிரி ரூ.20 லட்சம் வரை கடன் பெற தகுதி உடையவர் என்றாலும் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரி லோனுக்கு விண்ணப்பித்ததாகவும் அது கால தாமதம் ஆவதாகவும், கூறி கடன் கேட்டதால் கடன் கொடுத்தேன். எதிரி லோனிற்கு விண்ணப்பித்திருப்பதாகவும், அது கால தாமதம் ஆனதால் என்னிடம் கடன் கேட்டதாக சொல்வது தவறு என்றாலும் எதிரி என்னை எந்த காலத்திலும் சந்தித்தது இல்லை என்றாலும் சரியல்ல. 24.11.2022 அன்று என்னிடம் ரூ.1,50,000/– பணம் இருந்ததாக காட்ட நான் நீதிமன்றத்தில் ஆவணம் எதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 24.11.2022 அன்று என் கைவசம் ரூ.1,50,000/– பணம் இல்லை என்றாலும் அதனால்தான் அவ்வாறு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொன்ன காலகட்டத்தில் எதிரி நகைகள் வாங்கியுள்ளார் என்றாலும் அதற்கான பில்கள் அவர் வசம் உள்ளது என்றாலும் அவ்வாறு இருக்கையில் எதிரிக்கு என்னிடம் கடன் வாங்க

அவசியம் இல்லை என்றாலும் தவறு. நான் வருமான வரி செலுத்துகிறேன். நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ததில் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் விபரம் தெரிவிக்கவில்லை. எனக்கு கடன் கொடுக்க கூடிய அளவிற்கு வருமானம் இல்லை என்பதால் என் வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்தால் அந்த விபரம் தெரியவரும் என்பதால் நான் என் வருமான வரிக் கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் இருந்து 10 மாதங்கள் கழித்துதான் காசோலையை வாங்கினேன் என்றால் சரி. நான் அதுவரை எதிரியிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரி. லோண் வந்துவிட்டதாக தெரிவித்து கொண்டிருந்தார். நான் ஒரு நாள் வழியில் ஓங்கி பேசியபோது வீட்டிற்கு வாங்கள் காசோலை தருவேன் என்று சொன்னார். நான் தற்போது சொன்ன விபரங்களை என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் எதிரியை ஒருநாள் வழியில் ஓங்கி பேசி சத்தம்போட்டு எதிரி என்னை அவர் வீட்டிற்கு வரச் சொல்லி காசோலை தந்ததாக நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்வதற்கு முன்பே எதிரிக்கு HDFC வங்கி, 09.09.2022 அன்று ரூ.12,80,960/– லோண் அனுமதிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு 2022ம் ஆண்டு அக்டோபர் பிராவிடண்ட் பண்ட் பைனல் பேமண்ட் ரூ.2,90,000/– கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் மகளின் திருமணத்திற்காக எதிரி கடன் கேட்கவும் இல்லை வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மாத வருமானம் ரூ.1,26,000/– என்றால் எனக்கு தெரியாது.

7. அதனால் எதிரி என்னிடம் ரூ.1,50,000/– கடன் வாங்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 09.12.2023 மற்றும் 16.04.2023 எதிரியின் கணவர் கடன் பெற்று பல்வேறு நபர்களிடம் எதிரியின் காசோலையை திருடிச் சென்று கொடுத்துள்ளார் என்றும் எதிரியை துன்புறுத்துகிறார் என்றும் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அது குறித்து எனக்கு தெரியாது. நானும் எதிரியின் கணவரும் வஞ்சக் கூட்டு சேர்ந்து எதிரியின் காசோலையின் போலியாக கையொப்பம் செய்து எதிரிக்கு எதிராக இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் 2 காசோலை அடிநிலை திருத்தம் செய்யப்பட்ட காசோலை என்றாலும் நானும் எதிரியின் கணவரும் சேர்ந்து அவ்வாறு அடிநிலை திருத்தம் செய்துள்ளோம் என்றாலும் தவறு. பு.சா.ஆ.2 காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து அல்ல என்றால் தவறு. அந்த காசோலை தொகையை வசூலிக்க நான் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.551/2023 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த வழக்கில் காசோலையின் அசல் தாக்கல் செய்யப்பட்டதால் இந்த வழக்கில் அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன்.

8. நான் எதிரி என்னிடம் 12.11.2022 அன்று கடன் கேட்டதாகவும், 24.11.2022 அன்று நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாகவும் எதிரி எனக்கு 21.06.2023 அன்று காசோலை கொடுத்ததாகவும் சொல்வது தவறு என்றால் சரியல்ல. பு.சா.ஆ.2 காசோலையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்ததால் அடிநிலை திருத்தம் செய்யப்பட்டுள்ளது தெரியவில்லை என்றால் சரியல்ல. காசோலையில் திருத்தம்

இல்லை. எதிரியின் காசோலைகளை திருடிச் சென்றதாலும் அந்த நிரப்பப்படாத காசோலைகளை மோசடியாக உற்பத்தி செய்து நிறைய நபர்கள் எதிரியை தொந்தரவு செய்ததால் எதிரி அவர் வங்கி கணக்கை முடித்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படியான கடன் எதுவும் செலுத்தவேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.